RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 65 | மார்ச்.14 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "உலகின் பாதையை இந்தியா தீர்மானிக்கும்" பிரதமர் மோடி உறுதி

புதுடெல்லி: மார்ச்.14-

தனியார் தொலைக்காட்சி சார்பில் நெக்ஸ்ட் என்ற பெயரில் டெல்லியில் நேற்று 3 நாள் மாநாடு தொடங்கியது. இதில் 40 நாடுகளை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்று உள்ளனர். இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: உலக விநியோக சங்கிலி மீண்டும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நேரத்தில் ஐ.நா. சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் பங்கு கேள்விக்குறியாகி உள்ளது. இந்த இக்கட்டான சூழலிலும் இந்தியா தொடர்ந்து முன்னேறி செல்கிறது. உலகின் வளர்ச்சிக்கு நாங்கள் அளப்பரிய பங்களிப்பை வழங்கி வருகிறோம். இதன் காரணமாக உலகம் முழுவதும் இந்தியா குறித்த எதிர்பார்ப்பு மேலோங்கி வருகிறது.

பின்லாந்து பிரதமர் அலெக்சாண்டர் அண்மையில் டெல்லிக்கு வருகை தந்தார். அவர் கூறும்போது, "உலகம் செல்ல வேண்டிய பாதையை தற்போது குளோபல் சவுத் கூட்டமைப்பு தீர்மானிக்கிறது" என்று தெரிவித்தார். குளோபல் சவுத் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பு நாடாக இந்தியா விளங்குகிறது. இதன்படி உலகின் பாதையை தீர்மானிப்பதில் நாங்கள் முக்கிய பங்கு வகிப்போம். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.



## "ஒரு சாமானியரும் தலைவராகும் ஜனநாயகம் அதிமுகவில் உள்ளது" காளியம்மாள் பேட்டி

சென்னை, மார்ச்.14-

"ஒரு சாமானியரும் தலைவராகும் ஜனநாயகம் அதிமுகவில் உள்ளது'' என அதிமுகவில் இணைந்த நாதக முன்னாள் நிர்வாகி காளியம்மாள் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் முன்னாள் நிர்வாகி காளியம்மாள் சென்னையில் இன்று (மார்ச் 13) காலை எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார். அவருக்கு கட்சியில் முக்கியப் பொறுப்பும், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பும் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அதிமுகவை தேர்வு செய்ததற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. எடப்பாடி பழனிசாமி, அதிமுகவின் தலைமை பொறுப்புக்கு எளிய குடும்பத்தில் இருந்து வந்துள்ளார்.

ஒரு சாமானியரும் தலைவராகும் ஜனநாயக சூழல் இருப்பதால் தான் அதிமுகவை தேர்வு செய்து இருக்கிறேன். ஒரு தமிழனின் தலைமையின் கீழ் இயங்க அதிமுகவில் இணைந்துள்ளேன்.



ஒட்டுமொத்தமாக அனைத்து மக்களும் சேர்ந்து இந்த முடிவை எடுத்து இருக்கிறோம். இந்த முடிவை நான் தனித்து எடுக்கவில்லை.

மக்கள் ஒவ்வொரு நாளும் பிரச்சினைகளை சந்தித்து கொண்டுதான் இருக்கிறார்கள். விலைவாசி உயர்வு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகிய பல பிரச்சினைகளை மக்கள் சந்தித்து கொண்டுதான் இருக்கிறார்கள். மாற்றம் வராதா என எதிர்பார்க்கிறார்கள். வரவிருக்கும் தேர்தல் அதற்கான பரிசை தரும்.

அரசியல் கட்சியிலிருந்து விலகினாலும் மக்கள் அரசியலிலிருந்து விலகவில்லை. எனது குழந்தைகளுடன் நேரம் செலவிட விரும்பினேன். நாம் தமிழர் கட்சியில் செயல்படுவதற்கு முன்பு 2010ம் ஆண்டில் அதிமுகவில் ஏற்கெனவே செயல்பட்டுள்ளேன். 2010ல் அதிமுகவில் மாவட்ட பொறுப்பில் இருந்துள்ளேன். எனக்கு பொறுப்பு வழங்குவது குறித்து கட்சித் தலைமை முடிவு செய்யும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனைகள் கடுமையாக்க வேண்டும். அதுவரை இந்த தவறுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். மீண்டும் அந்தத் தவறை செய்யும் போதும் பயம் வரும் அளவுக்கு தண்டனைகளை கடுமையாக்க வேண்டும். அப்போது தான் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் குறையும்'' இவ்வாறு காளியம்மாள் தெரிவித்துள்ளார்.

## சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி, மார்ச்.14-

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வர்த்தக எல்பிஜி சிலிண்டர் பற்றாக்குறை நிலவுவதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மகர் துவார் பகுதியில் காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் மத்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், மேற்கு ஆசியாவில் நடக்கும் போரால் இந்தியாவுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவரும் கே.சி. வேணுகோபால், ''ஆட்சியாளர்கள் யதார்த்தத்தில் வாழவில்லை. அவர்கள் கனவுலகில் வாழ்கிறார்கள். எங்கள் தொகுதிகளில் மக்கள் மிகுந்த சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். தேசிய தலைநகரிலும் மக்கள் துன்பப்படுவதை நம்மால் பார்க்க முடிகிறது. இந்த யதார்த்தம் அவர்களை பாதிக்கவில்லை. அவர்கள் வாழும் உலகம் வேறாக உள்ளது. பொதுமக்களுடன் அவர்கள் இல்லை. இந்த அரசின் தவறான அணுகுமுறையாலும் வெளியுறவுக் கொள்கையாலுமே பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த விஷயம் குறித்து ராகுல் காந்தியை பேசவிடாமல் செய்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.



காங்கிரஸ் எம்பி சசி தரூர் கூறும்போது, "நாம் அமைதிக்கான ஆக்கப்பூர்வமான குரலாக ஒலிக்க வேண்டும். இந்த மோதல் நம்மை கடுமையாக பாதித்துள்ளது. இது மற்ற நாடுகளையும் ஒட்டுமொத்த பிராந்தியத்தையும் எரிசக்தி விநியோகத்தையும் எரிசக்தி பாதுகாப்பையும், வளைகுடா நாடுகளில் வாழும் 90 லட்சம் இந்தியர்களின் நலன்கள் மற்றும் பாதுகாப்பையும் பாதிக்கப் போகிறது. நமது பல சர்வதேச உறவுகள் இதனால் ஆபத்துக்குள்ளாகி உள்ளன.

இந்த மோதலை முடிவுக்குக் கொண்டு வர உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அழுத்தம் கொடுப்பதே உலக நலனுக்கு உகந்தது. இதில் நாம் ஒரு முன்னணி குரலாகத் திகழ வேண்டும். புவியியல் ரீதியாக நாம் அருகில் இருப்பதால், நமக்கு இழப்பு அதிகம். இதனால் நாம் அதிகம் பாதிக்கப்படுகிறோம்'' என தெரிவித்துள்ளார்.

சிபிஐ எம்பி சந்தோஷ் கூறும்போது, ''நாடு முழுவதும் குறிப்பாக பெரு நகரங்கள்தோறும் ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. கிராமங்களில்கூட சமையல் எரிவாயு தட்டுப்பாடு உள்ளது. உண்மையான குற்றவாளி யார்? எல்பிஜி விநியோகம் எவ்வித இடையூறும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அவர்கள் ஏன் எங்களை குறைகூற வேண்டும்'' என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்துப் பேசிய பாஜக எம்பி ஷஷாங் மணி, ''இது ஒரு உலகளாவிய பிரச்சினை. நமது அரசாங்கம் அதை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. பீதியை தடுப்பதிலும், பதுக்கலைத் தடுப்பதிலும், பொதுமக்கள் நிதானத்தைக் கடைப்பிடிக்க வலியுறுத்தியிலும் நமது அரசாங்கத்தின் செயல் பாராட்டுக்குரியது. பல்வேறு இடங்களில் உள்ள நிலைமைகள் குறித்த தகவல்களை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர். இந்த விஷயத்தை எதிர்க்கட்சிகள் அரசியலாக்குவதைத் தவிர்க்க வேண்டும்'' என கேட்டுக்கொண்டார்.

முன்னதாக இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி மறுத்தார். இதனால், அமளி நீடித்ததை அடுத்து முதலில் அவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

## திமுக கூட்டணியில் கொமதேகவுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு: உதய சூரியன் சின்னத்தில் போட்டி

சென்னை. மார்ச்.14-

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிக்கு (கொமதேக) இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், திமுக கூட்டணியில் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திமுக தரப்பில் வெளியான அறிக்கையில், "நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில், முதல்வர் ஸ்டாலினும், கொங்குநாடு மக்கள்



தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரனும் இன்று (13032026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியனர். அதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாட்டில் 2 (இரண்டு) சட்டமன்றத் தொகுதிகளில், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது'' இவ்வாறு அதில் கூறப்படுகிறது.

திமுகவுடன் தொகுதிப் பங்கீடு முடிவடைந்த பின்பு கொமதேக பொதுச்செயலாளர் கொங்கு ஈஸ்வரன் செய்தியாளர்களுக்கு அளித்தப் பேட்டியில், "கூட்டணியின் நலன் கருதியும், நல்லதொரு ஆட்சி தமிழகத்தில் அமைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது. என்டிஏ கூட்டணி கட்சிகள் ஓரிடத்தில் கூட எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி சிறப்பாக இருந்தது எனக் கூறவில்லை'' என்று தெரிவித்தார்.

## தமிழகத்தில் 15% உணவகங்கள் மூடல் கள்ளச்சந்தையில் சிலிண்டர் ரூ.6,000க்கு விற்பனை

சென்னை, மார்ச்.14-

வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாட்டால், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், கள்ளச்சந்தையில், வணிக சிலிண்டர் விலை ரூ.6 ஆயிரமாக உயர்ந்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் தீவிரத்தால், மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி, விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், திரவ பெட்ரோலியம் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளிப்பதற்காக, வர்த்தக சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, சென்னை உட்பட பல நகரங்களில் உணவுகளை தயாரித்து வழங்கும் ஹோட்டல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.



ஹோட்டல்களில் விற்கப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, வணிக சிலிண்டர் இல்லாததால், ஓட்டல்களும் மூடப்பட்டுள்ளன.215 ஹோட்டல்கள் மூடல்இந்நிலையில், தமிழகத்தில் 15 சதவீதம் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து, அச்சங்கம் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது: வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக, சென்னையில் 215 சிறிய மற்றும் நடுத்தர ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. பெரிய அளவிலான ஹோட்டல்கள் விறகு மற்றும் மின்சார அடுப்புகளுக்கு மாறியுள்ளன. சென்னை தவிர்த்து பிற நகரங்களில் பெரும்பாலானோர் மாற்று எரிபொருளுக்கு மாறியுள்ளனர்.மேலும் காஸ் சிலிண்டர் வருகையைப் பொருத்து அவ்வப்போது ஹோட்டல்களை திறப்பதும், உணவு வகைகளை கணிசமாக குறைத்தும் விற்பனையை மேற்கொள்கின்றனர் தமிழகத்தில் இதுவரை தோராயமாக 300க்கும் மேற்பட்ட உணவுக் கடைகள் அதாவது மொத்தம் உள்ள கடைகளில் 15 சதவீதம் என்ற அளவில் மூடப்பட்டுள்ளது. இவ்வாறு அச்சங்கத்தின் தெரிவித்துள்ளனர்.கள்ளச்சந்தையில் ரூ.6 ஆயிரம்வர்த்தக சிலிண்டர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கள்ளச்சந்தையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்கள் மிக அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ.2,043.50 ஆகும். இது தற்போது ரூ.6 ஆயிரம் முதல் ரூ.6,500 வரை கள்ளச்சந்தையில் கிடைக்கிறது.தேநீர் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில் "வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் கிடைக்கவில்லை, கள்ளச்சந்தையில் இந்த சிலிண்டர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எனவே மின் அடுப்புக்கு மாறிவிட்டோம். மேலும் வடை, பஜ்ஜி, சமோசா, போண்டா போன்றவற்றை தயாரிப்பதை நிறு த்திவிட்டோம்'' என்று தெரிவித்தார்.

## புள்ளிலைன் ஊராட்சியில் புதிய நியாய விலை கடை திறப்பு விழா



மாதவரம், மார்ச். 14-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்றத் தொகுதி புழல் ஒன்றியத்திற்குட்பட்ட புள்ளிலயன் ஊராட்சியில் ரூபாய் 13.30 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ். சுதர்சனம் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புடன் அரிசி பருப்பு, சர்க்கரை எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். மாவட்ட பிரதிநிதி ரமேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் உணவு வழங்கல் மற்றும் கூட்டுறவுத் துறை சார்ந்த அலுவலர்கள் உஷா, நந்தினி, தணிகாசலம், வேல்ராஜ், நீதிராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பார்த்தசாரதி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லதா, ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ், ஒன்றிய அவை தலைவர் செல்வமணி, ஒன்றிய துணை செயலாளர் முருகன், மாவட்ட கிளைக் கழக செயலாளர்கள் டில்லி பாபு தினேஷ் மனோகரன் ராமச்சந்திரன் வெங்கடேசன் மற்றும் யோகேஷ் திவாகர் கலைமணி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் புள்ளிலயன் ஊராட்சி செயலாளர் பொன்னயன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், திண்டுக்கல் மாவட்ட வாஷ் நிறுவனம் (நீர் மற்றும் சுகாதார நிறுவனம்), ஜி.டி.என். கலைக் கல்லூரி (தன்னாட்சி), சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய 1 நிறுவனம் மற்றும் 2 கல்லூரிகளுக்கு தமிழ்நாடு பசுமை சாம்பியன் விருது2025க்கான சான்றிதழ் மற்றும் ரூ.1.00 இலட்சத்திற்கான பரிசுத் தொகையினை வழங்கினார். அருகில், உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.ச.வினோதினி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் முனைவர்.ப.ரமேஷ் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.





## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 முன்னிட்டு தேனி மாவட்டம், பெரியகுளம் உட்கோட்டத்தில் கொடி அணிவகுப்பு

பெரியகுளம் மார்ச். 14-

தேனி மாவட்டத்தில் நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் ரூ 2026 முன்னிட்டு பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக வாக்களிக்கவும், தேர்தல் காலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலையை பாதுகாப்பாக நிலைநிறுத்தவும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா, உத்தரவின் பேரில், பெரியகுளம் உட்கோட்ட பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வி. மகேஷ் மற்றும் பெரியகுளம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் சி. நல்லு தலைமையில் காவல்துறையினர் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் இணைந்து கொடி அணிவகுப்பு (Flag March) மேற்கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை புரிந்த தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல் ஏ புத்தகம் வழங்கி வரவேற்றார்.கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்எல்ஏ உடனிருந்தார்.

## திருவாடானை அருகே மரைன் போலீஸ் அவசர எச்சரிக்கை: தொண்டி கடலில் ஏவுகணை போன்ற மர்மப் பொருள்? மீனவர்களுக்குத் தடை

திருவாடானை.மார்ச். 14-

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே தொண்டி மற்றும் திருப்பாலைக்குடி கடல் பகுதிகளில் ஏவுகணை போன்ற மர்மப் பொருள் ஒன்று மிதந்து வருவதாகப் பரவி வரும் தகவலால், கடலோரப் பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக மீனவர்கள் யாரும் அந்தப் பொருளைத் தொடவோ, கரைக்கு எடுத்து வரவோ கூடாது என மரைன் போலீசார் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.தற்போது சர்வதேச அளவில் ஈரான்



உள்ளிட்ட நாடுகளில் போர் பதற்றம் நிலவி வரும் சூழலில், கடல் வழியாகப் பல்வேறு ஆயுதங்கள் அல்லது ஏவுகணைகள் கடத்தப்படவோ அல்லது தாக்குதலுக்கு உள்ளாகவோ வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது. இந்நிலையில், தொண்டி கடல் பகுதியில் உருளை வடிவிலான, ஏவுகணை அல்லது எரிவாயு சிலிண்டர் போன்ற ஒரு மர்மப் பொருள் மிதப்பதாக மீனவர்கள் மூலம் கடலோரப் பாதுகாப்புக் குழும (மரைன்) போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

தகவல் கிடைத்தவுடன் உஷாரான மரைன் போலீசார், உடனடியாக கீழ்க்கண்ட கடலோரக் கிராமங்களுக்கு அவசரத் தகவலைத் தெரிவித்துள்ளனர்:தொண்டி, நம்புதாளை சோலியக்குடி, தேவிபட்டினம், முள்ளிமுனை, மற்றும் மோர்ப்பண்ணை மீனவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள முக்கிய அறிவுறுத்தல்கள்:கடலில் மிதந்து வரும் அந்த மர்மப் பொருளை எக்காரணம் கொண்டும் நெருங்குவதோ, கைகளால் தொடுவதோ அல்லது படகுகளில் ஏற்றி கரைக்குக் கொண்டு வருவதோ கூடாது.அந்தப் பொருள் எந்தத் திசையில் மிதந்து செல்கிறது என்பது குறித்துத் தகவல் தெரிந்தால், உடனடியாக அருகிலுள்ள போலீஸ் நிலையத்திற்கோ அல்லது ரோந்துப் பணியில் உள்ள மரைன் போலீசாருக்கோ தகவல் தெரிவிக்க வேண்டும்.இந்த எச்சரிக்கை காரணமாகத் தொண்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கடலோரக் கிராமங்களில் மீனவர்கள் மத்தியில் ஒருவித அச்சமும் பதற்றமும் நிலவி வருகிறது. அந்தப் பொருள் உண்மையிலேயே ஏவுகணையா அல்லது விண் வெளி ஆய்வு மையத்தின் கழிவுப் பொருளா என்பது குறித்து ஆய்வு செய்த பின்னரே தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்புப் படையினர் தற்போது அப்பகுதியில் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## சூரப்பட்டு சமுதாய நலகூடத்தில் மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்



மாதவரம், மார்ச். 14-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி சூரப்பட்டு சமுதாய நலக்கூடத்தில் மாதவரம் தெற்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் 73வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மகளிர் சுய உதவிக்குழு சுமார் 1000 மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சமுதாய வள பயிற்சியளர்கள் விஜயலட்சுமிஆனந்த் மற்றும் கவிதா ஆகியோர் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் கலந்து கொண்டு பிறந்த நாள் கேக் வெட்டி பின்னர் மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் அனைவருக்கும் உலக மகளிர் தின வாழ்த்தினை தெரிவித்து கொண்டு சுமார் 1000 மகளிர்களுக்கு புடவை போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மாதவரம் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், 32 வது வார்டு மாமன்ற உறுப்பினர் இ.ஏழுமலை, 32வது வட்டக் கழக செயலாளர் எம்.சரவணன், அவை தலைவர் மாரிமுத்து, மாவட்ட பிரதிநிதி டி.ரமணன், வட்ட துணைச் செயலாளர் கௌதம்பாலாஜி, மாவட்ட பிரதிநிதி செல்வம், பொருளாளர் ஆனந்த், பகுதி பிரதிநிதிகள் எஸ்.ஆனந்தகர்ணன், வி.கோபிநாத், சத்தியமூர்த்தி மற்றும் மகளிர் சுய உதவிக்குழு தலைவிகள் ஜெயகாந்தி, சாந்தா, ராதா, சாய்லட்சுமி, விஜயலட்சுமி, லட்சுமி, சரண்யா, அமுலு, நிர்மலா, பூங்கொடி, ஐஸ்வர்யா, இந்திராணி உள்ளிட்ட திமுக அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், மகளிர் குழுவினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம்புதூர் ஊராட்சி, வஞ்சிபாளையம் பிரிவில் நபார்டு திட்டத்தின் கீழ் வஞ்சிபாளையம் பங்கம்பாளையம் சாலையிலிருந்து ஊராட்சி எல்லை வரை சாலை மேம்பாட்டுப்பணிகள் பணிகளை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் மற்றும் குண்டடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவப்பிரகாஷ்,மாவட்ட பிரதி நிதி சரஸ்வதி பெரியசாமி, இளைஞரணி செயலாளர் கார்த்திக். ஆகியோர் கலந்து கொண்டனர்



## மாதவரம் மண்டலம் 32வது வார்டில் பேருந்து நிழற்குடைகள் திறப்பு விழா

மாதவரம், மார்ச். 14-

சென்னை மாநகராட்சி மாதவரம் மண்டலம் சூரப்பேடு, புத்தகரம் ஆகிய பகுதிகளில் 32 வது வார்டு மாமன்ற உறுப்பினர் இ.ஏழுமலை மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டி முடிக்கப்பட்ட பயணியர் நிழற்குடைகள் திறப்பு விழா 32 வது வார்டு மாமன்ற உறுப்பினர் இ.ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. மாதவரம் மண்டலக்குழு தலைவர் எஸ்.நந்தகோபால், 32வது வட்டக் கழக செயலாளர் எம்.சரவணன், மாவட்ட பிரதி நிதி டி.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் கலந்துகொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மாதவரம் மண்டலம் 32 வது வார்டுக்குட்பட் சூரப்பட்டு சிவப்பிரகாசம் நகர், புத்தகரம் திருமால் நகர் ஆகிய பயணியர் நிழற்குடைகளை ரிப்பன் வெட்டி மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். இதில் அரசு அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.41.51 லட்சம் மதிப்பிலான சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் பணிகள் துவக்கம்

கிருஷ்ணகிரி, மார்ச். 14-

கிருஷ்ணகிரி ஒன்றியம் பெத்தனப்பள்ளி பஞ்சாயத்து தண்டேகுப்பம் கிராமத்தில் ரூ.10 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை, காட்டிநாயனப்பள்ளி பஞ்சாயத்தில் வரட்டனப்பள்ளி முதல் கிருஷ்ணா கல்லூரி வரை ரூ.21.66 லட்சம் மதிப்பில் தார்சாலை மற்றும் கணேசன் வீடு முதல் தேசிய நெடுஞ்சாலை வரை ரூ.9.85 லட்சம் மதிப்பில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் துவங்கின.

மொத்தம் ரூ.41.51 லட்சம் மதிப்பிலான இத்திட்டப் பணிகளை அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அசோக்குமார் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கண்ணியப்பன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி, மாவட்ட இணை செயலாளர் சின்ராஜ், வர்த்தகப்பிரிவு ஒன்றிய செயலாளர் நாராயணகுமார், அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் ரமேஷ்குமார், ஆவின் தொழிற்சங்க மாநில துணைத்தலைவர் அருணாசலம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம் பந்தலூரில் மகளிர் தினத்தை முன்னிட்டு மருத்துவ முகாம்



நீலகிரி, மார்ச்.14-

நீலகிரி மாவட்டம் பந்தலூரில் மகளிர் தினத்தை முன்னிட்டு பந்தலூர் முழுநேர கிளை நூலகம், மற்றும் மகளிர் தையல் பயிற்சி மையம் ஆகியவற்றில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. பந்தலூர் கிளை நூலகத்தில்

பந்தலூர் கிளை நூலக வாசகர் வட்டம், செஞ் சிலுவை சங்க மருத்துவ குழுவினர் இணைந்து நடத்திய மருத்துவ முகாமிற்கு கிளை நூலகர்கள் அறிவழகன், நித்தியகல்யாணி, நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வாசகர் வட்ட தலைவர் முத்துகுமார் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார்.

மருத்துவர் அஸ்வந்த் தலைமையில் மருந்தளுநர் நவீன், செவிலியர் சுமதி நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்ட மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். முகாமில் வாசகர்கள், பொதுமக்கள், போட்டி தேர்வு மாணவர்கள் உட்பட பலர் இரத்த அழுத்தம் இரத்த சர்க்கரை அளவு மற்றும் இதர பொது மருத்துவ பரிசோதனை செய்து கொண்டு மருந்து மாத்திரைகள் பெற்று சென்றனர்.

அதுபோல பந்தலூர் மகளிர் தையல் பயிற்சி மையத்தில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன், செஞ் சிலுவை சங்க மருத்துவ குழுவினர் சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் தலைமை தாங்கினார் ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், தையல் பயிற்சி மையம் ஆசிரியர் ராஜேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் அஸ்வந்த் தலைமையில் மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளித்தனர். இதில் தையல் பயிற்சி மைய மாணவிகள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு, மற்றும் பொது மருத்துவ சிகிச்சை பரிசோதனை செய்து கொண்டனர்.



## நீலகிரி மாவட்டம் குன்னூர்வண்ணாரப்பேட்டை பகுதியில் அமைக்கப்பட்ட சமுதாய கூடம் திறப்பு விழா

நீலகிரி, மார்ச்.14-

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 4,5,6,12 மற்றும் 13 ஆகிய பகுதிகளில் வசிக்கும் 3500 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், வண்ணாரப்பேட்டை பகுதியில் அமைக்கப்பட்ட சமுதாய கூடம் திறப்பு விழாவில் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி வி.சி., மாநில விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை செயலாளரும் குன்னூர் நகர மன்ற துணை தலைவர் பா மு வாசிம் ராஜா மாவட்ட துணை செயலாளர் தமிழ்செல்வன், மாநில சிறுபான்மையினர் உரிமை பிரிவு துணை செயலாளர் ரா.அன்வர்கான், தலைமைக் கழக பேச்சாளர் மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் தலைவர் ஜாஹீர்உசேன் வி.சி., நகரமன்ற உறுப்பினர்கள் தாஸ், ஜெகந்நாதன், நாகராஜ், சாந்தா சந்திரன், ராபர்ட், கணேசன், கிளைக்கழக செயலாளர் ரஹீம், மாவட்ட தொழிலாளரணி துணை அமைப்பாளர் மகாலிங்கம், நகர விவசாய அணி அமைப்பாளர் ரவி, மகளிரணி சலோமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் திரளான பொதுமக்களுடன் கலந்து கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் 3வது மண்டலம் வார்டு எண்.44ல் ரூ.68இலட்சம் மதிப்பீட்டில் சிட்லபாக்கம் இராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி தொடக்க பள்ளி வளாகத்தில், புதிய கூடுதல் வகுப்பறைகள் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் இரா.ராஜா, சிட்லபாக்கம் ஜெகன், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காவல் துறையின் மெத்தனம் ஏற்புடையது அல்ல: தூத்துக்குடி மாணவி கொலை வழக்கில் ஐகோர்ட் காட்டம்

மதுரை, மார்ச்.14-

தென் மாவட்டங்களில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் வருத்தம் அளிப்பதாக உள்ளது என உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர்.



தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் மாரீஸ்வரி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: விளாத்திகுளம் குளத்தூர் பகுதியில் மார்ச் 10ம் தேதி மாலை இயற்கை உபாதை கழிக்க சென்ற 12ம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

மாணவி காணாமல் போனது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டபோது பெண் காவல் ஆய்வாளர் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார். மாணவியின் பெற்றோரை காவல் ஆய்வாளர் மோசமாக பேசியுள்ளார். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கடந்தும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

புகார் அளித்த உடனே போலீஸார் நடவடிக்கை எடுத்திருந்தால் மாணவி காப்பாற்றப்பட்டிருக்கலாம். போலீஸாரின் தாமதம் காரணமாக மாணவியின் உயிர் பறிபோயுள்ளது. தற்போது போலீஸார் தங்களின் மெத்தன போக்கை சமாளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இந்த வழக்கை உள்ளூர் போலீஸார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது. எனவே, மாணவியின் குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றியும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு இன்று விசாரித்தது. அரசுத் தரப்பில், 'விசாரணை சரியான பாதையில் செல்கிறது. குற்றவாளிகளை பிடிக்க 10 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளை கைது செய்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விசாரணையை வேறு அமைப்புக்கு மாற்றுவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும்' எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், 'தென் மாவட்டங்களில் கடந்த ஒரு மாதத்தில் நடைபெறும் இதுபோன்ற குற்ற நிகழ்வுகள் நீதிமன்றத்துக்கும் வருத்தம் அளிக்கின்றன. அதே நேரத்தில் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என அழுத்தம் கொடுக்கும்போது சரியான குற்றவாளிகளை கைது செய்யவோ, விசாரணையை சரியாக நடத்தவோ முடியாத நிலையை உருவாக்கும். வழக்கில் அறிவியல்பூர்வமான முறையில் சான்றுகளை சேகரிக்க வேண்டும். இதுபோன்ற விஷயங்களில் முறையாக விசாரணை நடத்த அவகாசம் வழங்காமல் அழுத்தம் தருவது விசாரணை சரியான பாதையில் செல்வதற்கு இடையூறு ஏற்படுத்தும்.

வழக்கு விசாரணை குறிப்புகளை போலீஸார் தாக்கல் செய்ய வேண்டும்" என்றனர்.

மனுதாரர் தரப்பில், "மாணவியின் பெற்றோர் புகார் அளித்த உடனே போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை" எனக் கூறப்பட்டது. அதற்கு நீதிபதிகள், "போலீஸார் இதுபோன்ற புகார்களை மெத்தனமாக கையாளுவது ஏற்கத்தக்கது அல்ல" என்றனர். பின்னர் விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

## நீலகிரி மாவட்டம் உதகையில் வனமும் வாழ்வும் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் மாணவ, மாணவியர்களுக்குசான்றிதழ்களை வழங்கினார்

நீலகிரி மார்ச். 14-

நீலகிரி மாவட்டம் உதகை கேர்ன்ஹில் காடு பகுதியில், ஆல் இந்தியா மகளிர் மாநாடு (AIWC) சார்பில், "வனமும் வாழ்வும்" திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் காடு பாதுகாப்பு குறித்த நிறைவு விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில், மாணவர்களுக்கு காடுகள் பாதுகாப்பின் முக்கியத்துவம், உயிரியல் பல்வகைமையை பாதுகாப்பது மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு குறித்தும், Keystone Foundation மற்றும் A Tree Foundation அமைப்புகளைச் சேர்ந்த வளநபர்கள் ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்தும், ஈரநிலங்கள் நீர் வளத்தை பாதுகாப்பதில், வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதிலும், இயற்கை சமநிலையை பேணுவதிலும் வகிக்கும் முக்கிய பங்கு குறித்தும், மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு காடு மற்றும் ஈரநிலங்களின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், "வனமும் வாழ்வும் திட்டத்தினை பள்ளிகளில் சிறப்பாக செயல்படுத்திய ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகையினையும், மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினர்.

இந்நிகழ்வில், மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங்க் ரவி , மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருநாவுக்கரசு, ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாணவி உடலை வாங்க உறவினர்கள் மறுப்பு; கனிமொழியை முற்றுகையிட்டதால் பரபரப்பு

தூத்துக்குடி, மார்ச்.14-

குளத்தூர் அருகே வேடநத்தம் காட்டுப் பகுதியில் 12ம் வகுப்பு மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்களை கைது செய்யும் வரை உடலை வாங்க மாட்டோம் என பெற்றோர் மற்றும் உறவினர்கள் மறுத்துள்ளனர். மாணவியின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்த திமுக எம்.பி. கனிமொழியை கிராம மக்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.



முன்னதாக, நேற்று இரவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, 'மாணவி கொலையில் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க வேண்டும். கொலை செய்யப்பட்ட மாணவியின் சகோதரிக்கு அரசு வேலை வழங்க வேண்டும்' என கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு, 'குற்றவாளிகளை கைது செய்ய தனிப்படை அமைத்து விசாரணை நடக்கிறது. மாணவியின் சகோதரி படித்துக் கொண்டிருக்கிறார். அவர் படிப்பை நிறைவு செய்யட்டும். அவருக்கு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மாணவியின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என அமைச்சர் தெரிவித்தார்.

ஆனால், அவர்களது போராட்டம் தொடர்ந்தது. இரவு 10.30 மணியளவில் கிராம மக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். பின்னர் வேடநத்தம் மற்றும் குளத்தூர் ஆகிய இடங்களில் போராட்டத்தை தொடர்ந்தனர். இன்று அதிகாலை 6 மணியளவில் 'குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். நீங்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்' என போலீஸார் கேட்டுக்கொண்டனர். இதையடுத்து அவர்கள் போராட்டத்தை கைவிட்டனர். ஆனாலும், குற்றவாளிகளை கைது செய்ய பின்னரே மாணவியின் உடலை பெற்றுக் கொள்வோம் என உறுதியாக தெரிவித்தனர்.

இந்நிலையில், தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினர் கனிமொழி இன்று காலை வேடநத்தம் வந்து, கொலை செய்யப்பட்ட மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார். அவரிடம் உறவினர்கள் நடந்தவற்றை கூறினர். 'மாணவியின் கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, அவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும். மாணவியின் சகோதரிக்கு அரசு வேலை வழங்க வேண்டும்' என கோரிக்கை விடுத்தனர். குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட பின்னரே மாணவியின் உடலை பெறுவோம் என்றும் தெரிவித்தனர்.

"இதுபோன்ற சம்பவம் நடந்திருக்கக் கூடாது. இது தொடர்பாக போலீஸார் துரிதமாக விசாரணை நடத்தி வருகின்றனர். விரைவில் குற்றவாளிகளை கைது செய்யப்படுவார்கள். மாணவியின் சகோதரி படித்து முடிக்கட்டும்" என கனிமொழி எம்.பி. தெரிவித்தார். அப்போது அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் கனிமொழி எம்.பி. கூறுகையில், 'இளம் மாணவிக்கு மிகப் பெரிய கொடுமை நடந்துள்ளது. ஏடிஎஸ்பி தலைமையில் 4 டிஎஸ்பிக்கள், 6 காவல் ஆய்வாளர்கள் தலைமையில் 10 குழுக்கள் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் விரைந்து கண்டுபிடிக்க வேண்டுமென்ற முனைப்போடு செயல்பட்டுக் கொண்டுள்ளனர். முதல்வர் கண்காணித்து வருகிறார். விரைவில் மாணவி இறப்புக்கு நியாயம் கிடைக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு மிக கடுமையான தண்டனை பெற்றுத்தரப்படும்" என்றார்.

முற்றுகையிட்ட கிராம மக்கள்:

பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்துவிட்டு கனிமொழி எம்.பி. வெளியே வந்தபோது, கிராம மக்கள் மற்றும் உறவினர்கள் அவரை சூழ்ந்து கொண்டு, 3 நாட்களாகியும் குற்றவாளிகள் கைது செய்யபடவில்லை என குற்றம்சாட்டினர். அவர்களிடம் கனிமொழி எம்.பி. விளக்கமளித்தார். அப்போது பெண்கள் "நேற்று முழுவதும் ரோட்டில் உட்கார்ந்திருந்தோம். யாரும் வந்தும் என்னவென்று கேட்கவில்லை. இரவு முழுவதும் போராட்டம் நடத்தினோம். குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும். பெண்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது" என்றனர்.

அவர்களிடம் பேசிவிட்டு கனிமொழி எம்.பி., அமைச்சர் கீதாஜீவன் புறப்பட்டபோது, சிலர் அவர்களை மீண்டும் மறித்தனர். போலீஸார் அவர்களை விலக்கிவிட்டு, எம்.பி., அமைச்சரை பத்திரமாக அழைத்துச் சென்றனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யபடவில்லை. சந்தேகத்தின் பேரில் சிலரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். தனிப்படை போலீஸார் பல்வேறு கோணங்களில் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நடந்தது என்ன?

தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் அருகே வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுமி. குறுக்குச்சாலை அரசு மேல் நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி வந்தார். வேடநத்தம் கிராமத்தில் பல வீடுகளில் கழிப்பிடம் இல்லாத நிலையில், இயற்கை உபாதையை கழிக்க அருகில் உள்ள காட்டுப்பகுதிக்கு கடந்த 10ம் தேதி இரவு அந்த மாணவி சென்றார். அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. பெற்றோர் உடனடியாக 10ம் தேதி இரவு குளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றனர். போலீஸார் அவர்களை, விளாத்திகுளம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க அறிவுறுத்தினர்.

11ம் தேதி காலை விளாத்தி குளம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்த போது, அங்கும் புகாரை பெறாமல் பலமணி நேரம் அலைக் கழிக்கப்பட்டனர். இதனால், மாணவியின் தந்தை மீண்டும்குளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்நிலையில், 11ம் தேதி மாலை வேடநத்தம் காட்டுப்பகுதியில் முகத்தில் காயங்களுடன் அந்த மாணவி இறந்து கிடந்தார். அதிர்ச்சியடைந்த பெற்றோரும், பொதுமக்களும் குறுக்குச்சாலை ராமேசுவரம் சாலையில் வேடநத்தம் அருகே இரவு மறியலில் ஈடுபட்டனர். போலீஸாரின் உறுதிமொழியை ஏற்று நேற்று அதிகாலை 1 மணியளவில் மறியல் கைவிடப்பட்டது.

ஆனால், நேற்று காலை யாரும் கைது செய்யப்படாததால், மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் குறுக்குச்சாலை விலக்கில் காலை 9 மணி முதல் மீண்டும் மறியல் தொடங்கியது. நெல்லை சரக டிஐஜி சரவணன், சார் ஆட்சியர் ஹிமான்ஷு மங்கள், எஸ்.பி. மதன் மற்றும் போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தியும் உடன்பாடு ஏற்படவில்லை. போராட்டத்துக்கு அதிமுக, நாம் தமிழர், தவெக, பாஜக, புதிய தமிழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சியினர் ஆதரவு தெரிவித்தனர்.

மாலை 5 மணியை கடந்தும் போராட்டம் நீடித்தது. தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. போக்குவரத்து மாற்று வழியில் திருப்பி விடப்பட்டது. இதேவேளையில், மாணவியின் உறவினர்களில் மற்றொரு தரப்பினர், மாணவியின் சடலத்தை வாங்க மறுத்து தூத்துக்குடி விவிடி சந்திப்பு அருகே மறியலில் ஈடுபட்டனர். அவர்களை போலீஸார் தடுத்ததால் கடும் வாக்குவாதம் மற்றும் லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிட்டனர்.

பெண் ஆய்வாளர் சஸ்பெண்ட் இச்சம்பவத்தில் புகாரை வாங்க போலீஸார் மறுத்ததாக எழுந்த புகார் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு, நெல்லை சரக டிஐஜியிடம் அறிக்கை சமர்ப்பித்தனர். அதன்பேரில், விளாத்திகுளம் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பிரவீனாவை பணியிடை நீக்கம் செய்து, டிஐஜி சரவணன் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

## காளையார்கோவில் ஒன்றியம் பாகனேரியருகே மூக்கம்பட்டி கிராம மக்கள் முதலமைச்சருக்கு வேண்டுகோள்

காளையார் கோவில் மார்ச். 14-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம் பாகனேரி அருகே உள்ளது மூக்கம்பட்டி கிராமம் இங்கு சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட முத்தரையர் இன மக்கள் வசித்து வருகின்றனர்...



பாகனேரியிலிருந்து சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் 1 கோடியே 34 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணிகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் பல்வேறு குளறுபடிகள் நடத்துள்ளதாக கிராமப் பொதுமக்கள் புகார் எழுப்பியுள்ளனர்...

தார்ச்சாலை அமைக்கும் பணிகளுக்கு முன்பாகவே இங்குள்ள மக்களின் பயன்பாட்டில் நல்ல நிலையில் இருந்து வந்த குளியல் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்தியதோடு மட்டுமில்லாமல் சாலையின் ஓரத்தில் தற்போது தேங்கியுள்ள கழிவு நீரை வெளியேற்றுவதற்கு வசதியாக ஒரு தூம்பு அமைத்து சிறு பாலம் அமைத்திட இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்...

வெயில் காலத்தில் இவ்வளவு தண்ணீர் தேங்கும் அதே சமயம் மழைக்காலங்களில் மிகவும் அதிகளவில் தண்ணீர் தேங்கினால் பள்ளி குழந்தைகள் மற்றும் வயது முதியோர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படும் அபாயகரமான சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது... ஆகவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு நிர்வாகம் நடவடிக்கை எடுத்து தங்களது வாழ்வாதாரத்தை காத்திட வேண்டுமாய் கோரிக்கை விடுத்துள்ளனர்...

மேலும் சாலையின் மேல் தரமற்ற பொருட்களை உபயோகபபடுத்தி வருவதாகவும். இதை தயவு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கவனத்தில் கொண்டு உரிய தீர்வினை ஏற்படுத்தி தருமாறு ஆகியோருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்...



# நவீனகால இயற்பியலின் தந்தை ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் பிறந்த தினக் கொண்டாட்டம்

காளையார் கோவில் மார்ச். 14-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கீழக்கோட்டையில் நவீனகால இயற்பியலின் தந்தை ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் பிறந்த தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியருமான ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் முன்னிலை வகித்தார். ஆசிரியை வாசுகி வரவேற்றார். சார்பியல் கொள்கையை உலகிற்கு வித்திட்ட ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் வாழ்க்கை வரலாற்று திரைப்படம் திரையிடப்பட்டது. மாணவர்கள் அனைவரும் நவீனகால இயற்பியலின் தந்தை ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் முகமூடி அணிந்து புகழாரம் சூட்டினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க



சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தன்னுடைய தலைமையுரையில் மார்ச் 14 1879 இல் பிறந்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் 147 ஆவது பிறந்தநாளை நாம் அனைவரும் கொண்டாடுகிறோம். இவர் நவீனகால இயற்பியலின் தந்தையாகக் கருதப்படுகிறார். மேலும் பிரபஞ்சத்தின் எல்லைகளை ஆராய அறிவியலுக்கு உதவிய புரட்சிகர கோட்பாடுகளுக்கு பெருமை சேர்த்துள்ளார். கருந்துளைகளை கணிப்பதில் இருந்து அவரது சார்பியல் கோட்பாடு வரை ஐன்ஸ்டீன் அறிவியல் உலகிற்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளார். பிரபஞ்சம் மற்றும் அதை நிர்வகிக்கும் சிக்கலான விதிகள் பற்றிய நமது புரிதலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார். கோட்பாட்டு இயற்பியலுக்கான அவரது சேவைகளுக்காகவும் குறிப்பாக ஒளி மின்னழுத்த விளைவின் விதியைக் கண்டுபிடித்ததற்காகவும் 1921 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். சத்துணவு உதவியாளர் அஞ்சலை சத்துணவு உதவி சமையலாளர் கஸ்தூரி காலை சிற்றுண்டி சமையல்காரர் பஞ்சவர்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மண்டலம்3, வார்டு எண்.42ல் ரூ.15இலட்சம் மதிப்பீட்டில் அன்னை அஞ்சுகம் பூங்காவில் புதிய நூலக கட்டிடத்தை தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்க்கு திறந்து வைத்தார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், 42வது வார்டு மாமன்ற உறுப்பினர் கல்யாணி மணிவேல், 42வது வட்ட செயலாளர் சி.மணிவேல் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



# முன்னாள் கவுன்சிலர் இரா.செல்வகுமாரின் சகோதரர் ரவிக்குமார் காலமானார்

தாம்பரம் மார்ச். 14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் இரா. செல்வகுமார் அவர்களின் சகோதரர்

இரா.ரவிக்குமார் அவர்கள் இயற்கை அடைந்தார் தகவலறிந்து தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., அவர்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ்,

எஸ். இந்திரன், ரமணி ஆதிமுலம், பி.ஜோதிகுமார், எஸ்.ஜி.கருணாகரன்,

கி.வேல்மணி, ஜா.ரவிக்குமார் ஆதிமாறன், வ.க.ரவி, இரா. விஜயகுமார், மங்களபுரம் பாபு, பி.காளியப்பன், முனுசாமி, கா.மு.சூர்யா, பி.வி.ஏகாம்பரம், கோ.ராஜேந்திரன், ஆர்.செல்வகுமார். ஸ்ரீதர்பாபு, இ.நடராஜன், ஆர்.ஜீவன், என்.ஷாஜகான்,

டி.கே.தாமஸ் ஆர்.அகஸ்டின், எம்,வினோத், சஞ்சிவி, செ.ஜீன்னபாய், வை.தங்கராஜ், சித்திரம் வாசுதேவன், பாஸ்கர், எம்.கல்யாணி. எம்.நாகராஜ், திவாகர், லோகேஷ், தனசிங், பி.மோகன், மைக்கல், ஆர்.மணி, திருமுடிவாக்கம் பாக்யராஜ், சதீஷ் ஆர்.மணி, சாந்தி செல்வராஜ், இரா.பாஸ்கர், எஸ்.சுரேஷ், எஸ்.ரமேஷ், எஸ்.மாரி, எஸ்.ராஜா, எஸ்.ராஜேந்திரன், எஸ்.மகேஷ், எஸ்.விஜி, பாலாஜி, செ.செல்வ பிரகாஷ், பிரவீன், ஆர்.அஜய், ஈஸ்வர், புஜ்ஜி, மௌலிஸ், மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகளும் பொது மக்களும் பெரும் திரளாக கலந்து அஞ்சலி செலுத்தினர்கள்.

# குண்டடம்-தாராபுரம் பகுதிகளில் ரூ.6.52 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகள் துவக்கம்

திருப்பூர், மார்ச்.14-

திருப்பூர் மாவட்டம் குண்டடம் மற்றும் தாராபுரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பல பகுதிகளில் ரூ.6.52 கோடி மதிப்பிலான புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.



மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை தலைமையில் (12.03.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடசின்னாரிபாளையம், எல்லப்பாளையம்புதூர், செங்கோடம்பாளையம் மற்றும் தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னபுத்தூர், பொட்டிக்காம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், பொதுநிதி மற்றும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்தும் கட்டண நிதி திட்டத்தின் கீழ் பல்வேறு சாலை மற்றும் கட்டிடப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக குண்டடம் காங்கயம்பாளையம் முதல் ஒலப்பாளையம் வரை ரூ.99.95 லட்சத்தில் சாலை மேம்பாடு, என்.கவுண்டம்பாளையத்தில் ரூ.13 லட்சத்தில் பல்நோக்கு மையம், ரூ.19 லட்சத்தில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்தொட்டி அமைப்பு, வஞ்சிபாளையம்ரூ பங்கம்பாளையம் சாலையில் இருந்து நந்தகுமார் தோட்டம் வழியாக ஊராட்சி எல்லை வரை சாலை மேம்பாட்டு பணி, வட்டமலைப்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ரூ.30 லட்சத்தில் புதிய சமுதாயக்கூடம் கட்டும் பணி ஆகியவை தொடங்கப்பட்டன.

தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் குருவப்பநாயக்கன்பாளையம்ரூ கவுண்டச்சிபுதூர் வழியாக சாலை மேம்பாடு, பொள்ளாச்சிரூ தாராபுரம் சாலை முதல் சின்னபுத்தூர் வரை சாலை மேம்பாடு, தளவாய்ப்பட்டணம் அய்யம்பாளையம் தார் சாலை மேம்பாடு, மேற்கு தெருவில் கான்கிரீட் சாலை அமைப்பு, பொம்மியம்மன் கோவில் முதல் கள்ளிபாளையம் வரை சாலை மேம்பாடு, பொன்னாபுரம் பகுதியில் பெத்தம்பட்டி முதல் பணப்பாளையம் வரை தார் சாலை அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பல திட்டங்கள் தொடங்கப்பட்டன.

மேலும், பொட்டிக்காம்பாளையம் ஊராட்சி எருக்கலாம்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடையையும் அமைச்சர் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதில் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் இல். பத்மநாபன். குண்டடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவப்பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி சரஸ்வதி பெரியசாமி, இளைஞரணி செயலாளர் கார்த்திக். தாராபுரம் ஒன்றிய செயலாளர் எஸ் வி செந்தில் குமார். முன்னாள் ஊராட்சி துணைத் தலைவர் சசிகுமார் திமுக கோணஅப்பன் சாலை செந்தில் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பையூரில் 100 அடி கொடிக்கம்பத்தில் திமுக கொடி ஏற்றிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

## கிருஷ்ணகிரியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை

கிருஷ்ணகிரி, மார்ச். 14-

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்த தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பையூரில் அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடிக்கம்பத்தில் திமுக கொடியை ஏற்றி வைத்தார்.



தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் பையூர் நடேசன் கடை அருகே 100 அடி உயர கொடிக்கம்பம் அமைக்கப்பட்டிருந்தது. இதில் நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு திமுக கொடியை ஏற்றி வைத்து கட்சியினருக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.வழி நெடுகிலும் பொதுமக்கள் துணை முதல்வரை வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை அருகிலுள்ள கலைஞர் திடலில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார். அங்கு பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஏற்கனவே நிறைவு பெற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார். மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் எம்.எல்.ஏவுமான மதியழகன், மேற்கு மாவட்ட செயலாளரும் எம்.எல்.ஏவுமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செங்குட்டுவன், முருகன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் கிருஷ்ணகிரி சென்னை சாலையில் அமைந்துள்ள தேவராஜ் மகாலில் திமுக சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி தேர்தல் பணிகளை தீவிரப்படுத்துவது குறித்து வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இந்த சந்திப்பு கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், நாராயணன், கிருஷ்ணகிரி மகேந்திரன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்கள் கே.வி.எஸ். சீனிவாசன், அன்பரசு, மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன், காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார்,மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன், நகர செயலாளர் ஜே.கே.எஸ். பாபு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி பாரி, மாவட்ட வர்த்தக அணி மணி விஜயன், ஒன்றிய அவை தலைவர் இளங்கோ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர்,மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, மாவட்ட பொருளாளர் கதிரவன்,ஒன்றிய அவை தலைவர் இளங்கோ, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர், முன்னாள் ஊராட்சி குழு துணை தலைவர் சசிகலா தசரா,பையூர் திமுக நிர்வாகிகள் பரத், தமிழ்செல்வம்,மதியழகன், சிவப்பிரகாசம், சிற்றரசு, உத்திரமணி, ஊர் கவுண்டர் சந்திரன், ஜெகதாப் கோவிந்தராஜ், அபி கவி கோவிந்தராஜ், திமுக பிரமுகர் கேபிள் சின்னசாமி

உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் காவேரிப்பட்டணம் உள்ளிட்ட ஒன்றியங்களைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியா@ 2047 புதுமைகள், நிலைத்தன்மை மற்றும் சமூக மாற்றம் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம்

காரைக்குடி மார்ச். 14-

சிவகங்கை மாவட்டம் காரைக்கு அழகப்பா பல்கலைக்கழக மகளிர் படிப்பு மையத்தின் சார்பாக இந்தியா @2047 புதுமைகள், நிலைத்தன்மை ,மற்றும் சமூக மாற்றம் குறித்த தேசிய கருத்தரங்கம் 13/03 /2026 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில், அழகப்பா பல்கலைக்கழக வீறுகவியரசர் முடியரசனார் கருத்தரங்கத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் படிப்பு மையத்தின் இயக்குனர் முனைவர்.ஆர்.போர்ஷியா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ,கௌரவ .கர்னல். பேராசிரியர் ஜி.ரவி அவர்கள் "பெண்கள் வீட்டு வேலையோடு இருந்துவிடாமல் தொழில்முனைவோராக உருவெடுக்க வேண்டும் என்றும் ,பெண்களின் முன்னேற்றம் குறித்து நிகழ்விற்கு தலைமை உரையாற்றி சிறப்பு செய்தார். அதனைத் தொடர்ந்து அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் படிப்புகள் மையத்தின் செயல்பாடுகள் ஆவணப்படக் காணொளியாக ஒளிபரப்பப்பட்டது.





நிகழ்வின் அடுத்ததாக பல்கலைக்கழக மானிய குழு (யுஜிசி) செயலாளர் பேராசிரியர் .மணீஷ் ஆர் .ஜோஷி அவர்கள் கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து ,"இந்திய அளவில் உயர் கல்வி படிப்புகளில் பெண்கள் 28சதவிகிதம் உள்ளனர் என்றும் ,அதில் தமிழ்நாட்டில் 58 சதவீதம் உள்ளனர் என்றும்,இந்த விகிதமானது எதிர்வரும் காலங்களில் உயர வேண்டும் என எடுத்துரைத்து நிகழ்விற்கு தொடக்க உரையாற்றினார். அதனைத்தொடர்ந்து அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்ற குழு உறுப்பினர் பேராசிரியர். சேகர் அவர்கள்,"இந்திய அளவில் தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்புகளில் பெண்கள் 58 சதவீதமாக இருப்பது நமக்கெல்லாம் பெருமை என்றாலும், இந்த விகிதம் மேலும் உயர அனைத்து பெண்களும் உயர்கல்வி கற்க முன்வரவேண்டும் என எடுத்துரைத்து வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வின் நிறைவாக அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் படிப்புகள் மையத்தின் உதவி பேராசிரியர் முனைவர் .எஸ் .பால் புனிதா அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் படிப்புகள் மையத்தின் பேராசிரியர்கள், கல்வியியல் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள் ,மற்றும் கல்வியியல் துறையின் துறை தலைவர் , பேராசிரியர்கள் மற்றும் கல்வியியல் புலத்தின் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161